IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

A.S. No. 16/2022

Deposition of Witness for PW.2

Name : திரு. பன்னீர்செல்வம்
Father Name :
Age :
Caste :
Calling :
Religion :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.10.2023

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

நான் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர். மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் தாவா சொத்தை மீண்டும் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். அந்த அறிக்கை மற்றும் வரைபடம் முறையே நீ.ம.சா.ஆ.4 மற்றும் நீ.ம.சா.ஆ.5. ஆகும். நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வா.சா.ஆ.1–ன் கீழான சொத்தின் தெற்கு எல்கையை மாற்றம் செய்யாமல் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின் படி சொத்தை அளந்தேன். வாதியின் சொத்திற்கும் பிரதிவாதியின் சொத்திற்கும் ஏற்ற இறக்கம் உள்ளது. I,B,J,I என்று நீ.ம.சா.ஆ. 5 வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பகுதி ரீ–சர்வே எண் 429/19 ல் வருகிறது. I,B,J,I என்று காட்டப்பட்டுள்ள பகுதிக்கு தனியாக வேலி தெற்குப் பக்கத்தில் இல்லை. ஆனால் கிழக்குப் பக்கத்தில் உள்ளது. I,B,J,I என்ற பகுதி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்திற்குள் வருகிறது. I,B,J,I என்ற பகுதி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்திற்குள் வருவதற்கு வாய்ப்பில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து ரீ–சர்வே எண் 429/18 மற்றும் 429/19 ஆகியவற்றில் வருகிறது. நீ.ம.சா.ஆ. 1 அறிக்கையில் குறிப்பிட்ட கால்வாய் தற்போது நான் தல ஆய்வு செய்யும் போது இல்லை.

குறுக்கு விசாரணை

பி.வா.சா.ஆ.1ன் படியான சொத்தை அளந்து நீ.ம.சா.ஆ.5 வரைபடத்தில் O,R,S,B,J,I,M,N,O என்று குறிப்பிட்டுள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவண தேதியை 1984 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக 1994 என்று என்னுடைய அறிக்கை மற்றும் வரைபடத்தில் தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன். பி.வா.ஆ.2 ஆவணத்தில் கண்ட சொத்தை அளந்து நீ.ம.சா.ஆ.5 வரைபடத்தில் O,P,Q,R,O என்று குறிப்பிட்டுள்ளேன். ரீ–சர்வே எண் 429/19ல் கண்ட 25 செண்ட் முழுவதும் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2ல் கண்ட ஆவணங்களுக்குள் வருகிறது. B,I,J,B பகுதி பி.வா.சா.ஆ1 ஆவணத்தில் கண்ட 23 செண்ட்டிற்குள் வருகிறது. நீ.ம.சா.ஆ.5 வரைபடத்தில் C,J அளவுகளுக்குள் காம்பவுண்ட் சுவர் காட்டியுள்ளேன். கிழக்கே உள்ள வீட்டிற்கு வடமேற்கு மூலை J புள்ளி வருகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.